Registered as a News Paper in Sri Lanka. கக்கங்கள் 06 விலை ரூபா: 4 50

# ஈழநாதம்

THE EELANAATHAM People's Daily மக்கள் தினசரி

நாதம் 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 சித்திரை 21 ( 04 - 05 - 1991 ) சனிக்கிழமை ஓசை: 75

## தோடும், மூக்குத்தியும் மூதாட்டியிடம் அபகரிப்பு

(திருக்கோணமலை)

திருமலை மாவட்டத்தில் சிறிலங்கா இராணுவத்தினர் வயோதிபப் பெண்ணொருவரின் நகைகளைப்பறித்துச்சென்றுள்ளனர். கடந்த திங்களன்று 64 ஆம் கட்டையில் இருந்து கயமுந்தான் என்னுமிடத்திற்கு சிறிலங்கா இராணுவத்தினர் வந்தபோது அவ்விடத்தில் இருந்து பொதுமக்கள் ஓடிவிட்டனர். இதன்பின்னர் வீடொன்றில் (6 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழர் பொருளாதாரம் திட்டமிட்டுக் கருவழிப்பு



## திருமலை மாவட்டப் பொறுப்பாளர் குணம்

(யாழ்ப்பாணம்)

திருமலையில் தமிழர் பாரம்பரிய பிரதேசங்களை சிங்களவரும், முஸ்லிம்களும் இராணுவத்தினருடன் சேர்ந்து ஆக்கிரமித்துவரும் வேளையில், மறுபுறத்தில் தமிழரின் பொருளாதாரத்தை சிறிலங்கா அரசாங்கம் திட்டமிட்டுக் கருவழித்து வருவதாகவும் விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்டப் பொறுப்பாளர் குணம் தெரிவித்தார்.

ஈழநாதத்திற்கு சிறப்புப் பேட்டியளித்த திரு. குணம் மேலும் தெரிவித்ததாவது:

திருக்கோணமலையைப் பொறுத்தவரையில் தமிழரின் பாரம்பரியமான கிராமங்களிலும், குறிச்சிகளிலும் சிங்களவர்கள் குடியேற்றப்படுகிறார்கள். சிறிலங்கா இராணுவத்தின் அனுசரணையுடன் இடம்பெறும்குடியேற்றம் அண்மைக்கால நிகழ்வு என்று கருதமுடியாது இது சிங்களப் பேரின அரசு ஏலவே வகுத்துக் கொண்ட குறிக்கோளின் விஸ்தரிப்பாகும் என்றார்.

இறக்கண்டி முன்பு தமிழர் வசித்த கிராமம். இதை ஒரு சிங்களக் குடியேற்றமாக செம்மைபடுத்தும் முயற்சி மெல்ல மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. சலப்பை ஆறு, புடவைக்கட்டுஆகிய இரு கிராமங்களிலும் இராணுவ முகாம்கள் உள்ளன இராணுவத்தின் பாதுகாப்பில் இக்கிராமங்களிலும் சிங்களவர் குடியேறியுள்ளனர். தமிழரின் வீடுகள் உடைக்கப்பட்டு, அதில் இருந்து பெறப்படும் உபகரணங்களும் தட்டுமுட்டுச் சாமானகளும் சிங்களவருக்கு (6ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### ஜெயக்கொடி

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவில் நேற்று முன் தினம் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரவேங்கை ஜெயக்கொடி (கந்தையா, இராசவர், காஞ்சூரை மோட்டை, நெடுங்கேணி, முல்லைத்தீவு) என்பவர் வீரமரணமடைந்துள்ளார் இவருக்கு விடுதலைப்புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## இளைஞர் கைது

(புங்குடுதீவு)

தீவுப்பகுதியில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் அப்பகுதியில் பொதுமகன் ஒருவரைக் கைது செய்துள்ளனர். சுருவில் பகுதியைச் சேர்ந்த ந. பன்னீர்செல்வம் (வயது 29) என்ற இளம் குடும்பஸ்தரையே படையினர் கைது செய்துள்ளனர். (22)

## வவுனியா மோதலில் ஒரு படை பலி; 5பேர் காயம்

(கொழும்பு)

நொச்சிமோட்டை நோக்கி முன்னேறிய இராணுவத்தினருக்கும் புலிகளுக்கும் இடையிலான மோதலில் இராணுவ தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாகவும். மேலும் ஐந்து படையினர் படுகாயமடைந்ததாகவும்சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் கூறியுள்ளன.

மேலும் பாதுகாப்பு வட்டா (6ஆம் பக்கம் பார்க்க)

## வேப்பங்குளத்திலிருந்து மேலும் ஆயுதங்கள் மீட்பு

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் மார்ச் மாத இறுதியில் வேப்பங்குளத்தில் சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையே ஏற்பட்ட மோதலில் பல இராணுவத்தினர் பலியானதும், பெருந் தொகையான ஆயுதங்கள் மீட்கப்பட்டதும் தெரிந்ததே.

இதே இடத்தினை விடுதலைப்புலிகள் நேற்றுமுன்தினம் பார்வையிட்டபோது மேலும் (6ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில்ராணுவத்தால் 2 தமிழர் வெட்டிக்கொலை

(திருக்கோணமலை)

திருக்கோணமலையில் சிறிலங்கா இராணுவத்தினரால் இரண்டு பொது மக்கள் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளார்கள்.

கடந்த புதன்கிழமை பாலத்தோப்பூர் முகாமைச் சேர்ந்த இராணுவத்தினர்திருக்கோணமலை மாவட்டத்திலுள்ள பட்டுத்திடல் என்னுமிடத்தில் வைத்து ஒரு ஆணையும், ஒரு பெண்ணையும்வெட்டிக்கொன்றுள்ளனர்.

## இராணுவம்ஆர்.பி.ஜி தாக்கு; புலிகள் அருள்89 தாக்கு

புன்னாலைக்கட்டுவனில் நேற்றையதினம் காலை 5 45 மணியளவில் வீதிக்குக்குறுக்கே இருந்த தடைமீது சிறிலங்கா இராணுவத்தினர் எட்டு ஆர். பி. ஜி ஷெல்களை ஏவியுள்ளனர். பின்னர் விடுதலைப் புலிகள் இரண்டு அருள் 89 ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர். இத் தாக்குதல்களினால் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

## அவசரகாலச் சட்ட சரத்துகள் சில நீக்கம்

(கொழும்பு)

வடக்குக் கிழக்கு மாகாணங்கள் தவிர்ந்தநாட்டின் ஏனைய பகுதிகளில் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் தகுந்த ஆணைப்பத்திரமின்றி தாம் நினைத்தபடி தேடுதல் செய்வதோ அன்றி கைது செய்வதோ அல்லது தடுத்துவைப்பதோ நிறுத்தப்பட்டுள்ளதாக சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா அறிவித்துள்ளார்.

இந்த நடவடிக்கைகளுக்கு அதிகாரம் அளிக்கும் அவசரகாலச் சட்டத்தின் 18 ஆம் பிரிவுரத்துச்செய்யப்பட்டுள்ளதென இந்த அறிவிப்பில் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## "எழுந்திடும் உணர்வுகள்"

(மன்னார்)

மடு அகதிமுகாமில் நான்கு இடங்களில் "எழுந்திடும் உணர்வுகள்" என்னும் சமூக நாடகம் அரங்கேற்றப்பட்டுள்ளது. முழங்காவில் மகா வித்தியாலய மாணவர் இயக்க உறுப்பினர்களும், கலை கலாசாரப்பிரிவினரும் இணைந்து நடாத்தியஇந்தநாடகத்தினை பல்வேறு இடங்களில் இருந்து வந்து மடு அகதிமுகாமில் தஞ்சபுகுந்துள்ள பெருந்தொகையான மக்கள் பார்த்தனர். சிறிலங்கா இராணுவத்தினரின் கொடுமைகள் பற்றியும். வீரமரணமடையும்போராளிகளின் உணர்வுகள்பற்றியும் இந்தநாடகத்தில் சித்திரிககப்பட்டுள்ளது.

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேலணையில் ஒருவர்மோட்டார் சைக்கிள் விபத்திற்குள்ளானார். எஸ். சுந்தரேசன் என்ற 49வயது நிரம்பிய இவர் வீதியில் சைக்கிளொன்றில் சென்றுகொண்டிருந்த சமயம் மோட்டார் சைக்கிளுடன் மோதுண்டதில் கால் ஒன்று முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

## வவுனியாவில் இரு நாள் குண்டுவீச்சால் சிறுமி பலி; நால்வர் காயம்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தின் பல பகுதிகளில் நேற்றும், நேற்று முன்தினமும் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்ட விமானத் தாக்குதல்களால் சிறுமியொருத்தி பலியானதுடன், மூன்று பொதுமக்கள் படுகாயமடைந்துள்ளனர். நான்கு வீடுகள், ஒன்பது கடைகள், கமநலசேவைக்கட்டடம் என்பனவும் பலத்த சேதமடைந்தன.

நேற்று முன்தினம் மாலை நான்கு மணியளவில் புளியங்குளம் பகுதியில் அவ்ரோ விமானம் ஒன்று ஐந்து குண்டுகளை வீசியது. இக்குண்டு வீச்சுச் சம்பவத்தில் சிறுமி ஒருத்தி பலியானதுடன், இரண்டு பொதுமக்கள் படுகாயமடைந்தனர். அத்துடன் இப்பகுதியிலுள்ள எட்டுக் கடைகள், இரண்டு வீடுகள் என்பன சேதமடைந்தன.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீடுகள், கடைகள் மணலாற்றில் சேதம்

(மணலாறு)

மணலாறு மாவட்டத்தில் யேதினத்தன்றும் மறுநாளும் தொடர்ச்சியாக முழுநாளும் இடம்பெற்ற விமானத் தாக்குதலில் இரண்டு கடைகள், பத்து வீடுகள் என்பன பலத்த சேதமடைந்தன.

கடந்த புதன், வியாழன் ஆகிய தினங்களில் மணலாறு மாவட்டத்திலுள்ள குமுளமுனை, செம்மலை ஆகிய பகுதிகளில் சிறிலங்கா விமானப் படையைச்சேர்ந்த வை-12ரக விமானம், அவ்ரோ விமானம், (6ஆம் பக்கம் பார்க்க)

## விடைத்தாள் திருத்துவதற்கு 75வீதம் வடக்கிலிருந்து

(யாழ்ப்பாணம்)

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் விசேட உயர்தரப் பரீட்சைவிடைத்தாள திருத்தும்பணிக்கு இந்தமுறைவடபகுதியிலிருந்து எழுபத்தைந்து வீதமான திருத்துனர்கள் அனுப்பிவைக்கப்பட உள்ளனர் என வடபிரந்திய கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் விடைத்தாள் திருத்துனர்கள் விண்ணப்பித்தல் பற்றி மேலும் குறிப்பிடுகையில் தற்போது தமக்கு இரு பிரிவுகளைச்சேர்ந்த விண்ணப்பங்கள் வருவதாகவும் அவற்றுள் ஒன்று முன்பே பல வருடங்கள் திருத்தும் அனுபவம் கொண்டவர்கள். ஏனையோர் புதிய விண்ணப்பதாரிகள். புதி (6 ஆம் பக்கம் பார்க்க)

## சனி, ஞாயிறு தினங்களில் முழுநேர வேலை

(யாழ்ப்பாணம்)

வேலணை ப.நோ.கூ. சங்க தற்காலிக சில்லறை விற்பனை நிலையங்களில் இன்று சனிக்கிழமையும். நாளை ஞாயிறுக்கிழமையும் முழுநேரமும் 37 ஆம்கட்ட உலா உணவு விநியோகம் இடம்பெறும். உறவினர் வீடுகளில் தங்கியிருப்பவர்களுக்கும், முகாம்களில் உள்ளவர்களுக்கும்தொடர்ந்து உலர் உணவு வழங்கப்படவுள்ளது இத்தகவலை வேலணை ப. நோ. கூ. சங்கத் தலைவர் பொ. நடராசாதெரிவித்தார். (88)

## நிர்வாகிகள் தெரிவு

(கொழும்புத்துறை)

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் இலங்கைக்கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டம் அண்மையில் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட நடப்பு வருட புதிய நிர்வாகிகள் விபரம் பின்வருமாறு :- பேஷகர் திரு . ஜி . பி . வின்செனற், தலைவர்:- திரு . ஆ . சண்முகலிங்கம், உபதலைவர்:- திரு. வே . கெ . தனபாலன், இணைச் செயலாளர்கள்:- திரு . எஸ் . பரமநாதன், திரு சி. சி.வரதராசா , பொருளாளர் :- திரு . இ . ராஸ்குமார்.

மற்றும் செயற்குழு உறுப்பினர்களாக எட்டுப்பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

(24)

## விறைப்பு ஊசி இன்மையால் நோயாளர் சிரமம்

(மானிப்பாய்)

தெல்லிப்பளை அரசினர் மருத்துவமனையில் விறைப்பு ஊசி மருந்து இல்லாத காரணத்தால் கடந்த ஒரு வாரமாக பல் நோயாளர் பெரும் சிரமத்திற்குள்ளாகின்றனர்.

மேற்படி வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு அகற்றப்பட வேண்டிய பற்களை அகற்றுவதற்கு விறைப்பு ஊசி ஏற்ற மருந்து இல்லை எனவும் அதனாலையே இந் நோயாளர்களுக்குப் போதிய அளவு சிகிச்சை அளிக்கமுடியாதிருப்பதாகவும் மேற்படி வைத்திய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதனால் அங்கு தினமும் நோயாளர் வந்து ஏமாற்றமடைந்து செல்கின்றனர் மேற்படி வைத்தியசாலைக்கு வரும் ஏனைய நோயாளரின் தொகை இம்முறை கணிசமான அளவு அதிகரித்துள்ளதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன (ச)

## குழந்தை மரணம்

(கொழும்புத்துறை)

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்து அகதி முகாமில் தங்கியிருந்த எட்டுமாத குழந்தை ஒன்று நோய் ஏற்பட்டு மரணமடைந்துள்ளது.

ஊர்காவற்றுறையைச் சேர்ந்த ரகுபாலன் ரவீந்திரா என்ற குழந்தை கொழும்புத்துறைப் பகுதியிலுள்ள அகதி முகாம் ஒன்றில் தங்கியிருந்த நேரத்தில் கடும் காய்ச்சல், சளி போன்ற நோய்களுக்குட்பட்டு மரணமடைந்துள்ளது.

(க)

**MODERN EDUCATION CENTRE**
KARAVEDDY
*Diploma in Computer*
PROGRAMMING COURSE
BASIC LANGUAGE
(B/2467) 11–05–91 – 4 p.m

## 45-ம் நாள் நினைவஞ்சலி



### லெப்டினன்ட் கஸ்ரோ

(செல்வன் நடேசபிள்ளை செந்தூரன்)

சிலாவத்துறை முகாம் மோதலில் வீரமரணம்

தாயக மண்ணில்: 08 - 11 - 1971

தாயக விடிவில்: 21 - 03 - 1991

வயது இருபதை அடையும் பராயம்
தாயக மண்ணை மீட்கும் பணியில்
தயக்கம் இன்றியே தானை நடத்தி
தாயக எல்லைவரை சென்றவனே !
சிலாவத்துறையும் வென்று
உலா வருவாய் என்றிருந்தோம் !
மாவீரர் பட்டியலில் உன் பெயரும்
சேர்ந்துவிட்ட செய்தி கேட்டோம் ! !
சோர்ந்து போகாது எம் உள்ளம்
சொரியும் கண்ணீரால் விடுதலைப் பயிர் வளர்ப்போம் !!

18, பெருமாள் கோயில்
தெற்கு வீதி,
யாழ்ப்பாணம்.

பெற்றோர் - உற்றார்
உறவினர்.

(B/2455)

## சிரமதானம்

(கொழும்புத்துறை)

குருநகர் சென்றோற்ஸ் சனசமூகநிலையம், கிராமிய மகளிர் அபிவிருத்திச் சங்கம், ஐக்கிய நாணயச்சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கம் மூன்றும் கூட்டாக இணைந்து குருநகர் ஆரோக்கியநாதர் ஆலயம் உள்ள உட்பக்கம் வெளிப்பக்கம், விளையாட்டு மைதானம் ஆகியவற்றை அண்மையில் சிரமதானப் பணி மூலம் துப்பரவு செய்துள்ளனர்.

இப்பகுதி இளையதலைமுறையின் விளையாட்டுக் குழுவினர், ஆரோக்கியநாதர் ஆலய பரிபாலன சபைப்பாட்டுக் குழுவினர், பொது அமைப்புகள் ஆகியன இணைந்து இச் சிரமதானப் பணியை சிறப்பாகச் செய்தனர் சிரமதானப் பணியில் ஈடுபட்டவர்களுக்கு இப்பகுதி மக்கள் தேநீர், குளிர்பானம் கொடுத்து உபசரித்தனர்.

(24)

★

மானிப்பாய் வடக்கு கிராமிய உற்பத்தி குழுவினாலும் வளர்மதி சனசமூக நிலையத்தினாலும் மானிடபாய்வடக்கு பொதுமக்களினாலும் 1-5-1991 மே தினத்தன்று காலை 5மணி தொடக்கம் 7 மணிவரை கேலங்காமம் வாய்க்காலை சிரமதானம் மூலம் துப்பரவு செய்யப்பட்டது.

## அபிவிருத்திசபை கூட்டம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை மத்திய குழுவின் முதலாவது கூட்டம் இன்று சனிக்கிழமை வைத்தியசாலை விரிவுரை மண்டபத்தில் வைத்தியசாலை அபிவிருத்திச் சபைத் தலைவர் டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

வைத்தியசாலையின் அபிவிருத்தி மேம்பாடு கருதி வைத்தியசாலை அபிவிருத்திச் சபையால் அமைக்கப்பட்டுள்ள இம்மத்திய குழுவில் வடமராட்சி வடக்கு, வடமராட்சி கிழக்கு, வடமராட்சி தெற்கு, மேற்கு ஆகிய மூன்று உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலுமிருந்து கிராமசேவை அலுவலர் பிரிவுகள் ரீதியாக தலா ஒவ்வொரு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் இவ்வுறுப்பினர்களை அவ்வப்பகுதி உதவி அரசாங்க அதிபர்கள் தெரிவு செய்து வைத்தியசாலை அபிவிருத்திச் சபைக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

(25)

## 90ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 07 - 12 - 1971

மறைவு 04 - 02 - 1991

செல்வன்

### கோபாலசிங்கம் ஜெயகோபால்

(ரூபன்)

உமது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்
அந்தியேட்டி வீட்டுக் கிரியை இன்று நடைபெறும்

உருத்திரபுரம்

உங்கள் பிரிவால் துயருறும்
அப்பா, அம்மா, சகோதரங்கள்
மற்றும் உற்றார், உறவினர்.

(B-2459)

## நினைவு கூருகின்றோம்

1991 - 05 - 04



காமினி
(காமினி அனஸ்டீன் –குருநகர்)

லெப். மைக்கல்
(ஜோசப்பிள்ளை –தியாகராசா அக்கரைப்பற்று)



1987 ஆம் ஆண்டு வந்தாறுமூலையில்
சிறிலங்காப் படைகளுடனான மோதலில்
வீரமரணமடைந்த
காமினி (காமினி அனஸ்டீன் - குருநகர்)
லெப். டயான் (சின்னத்துரை தேவலிங்கம் - ஆரையம்பதி, மட்டக்களப்பு)
1988 ஆம் ஆண்டு ஆலையடிவேம்பு பகுதியில்
இந்தியப்படை மற்றும் தேசவிரோத சக்திகளுடனான
மோதலில் வீரமரணமடைந்த
லெப். மைக்கல்
(ஜோசப்பிள்ளை தியாகராஜா - அக்கரைப்பற்று)
லெப். சுரேஸ் (குழந்தைவேல் தவராசா - அக்கரைப்பற்று)
ராமநாதன் (அக்கரைப்பற்று)
இதே அண்டு திராய்க்கேணியில் இந்தியப்
படையினரின் சுற்றிவளைப்பின் போது
வீரமரணமடைந்த
2ஆம் லெப். சரத்
(மார்க்கண்டு கண்ணதாசன் - காரைதீவு)
1990 ஆம் ஆண்டு கல்முனையில் தவறுதலான
துப்பாக்கிச் சூட்டினால் எமைப்பிரிந்த
அலெக்ஸ் (அகமட்ரியாஸ் - பெரியநீலாவணை)
ஆகியோரை இந்நாளில் நினைவு
கூருகின்றோம்.

– விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2407)

# பருப்பு மணிகளைப் பாதுகாத்தலில் தாவர எண்ணெய்

பயத்தை, பாசிப்பயறு, உழுந்து, சோயா அவரை போன்ற பருப்பு விதைகளை பாதுகாக்க சாதாரண விவசாயியும், வியாபாரியும் மேற்கொள்ளக்கூடிய எளிய பூச்சித் தாக்காத தடுப்பு முறைகளில் ஒன்றே இதுவாகும்.

பருப்பு விதைகளின் முக்கிய பூச்சி எதிரியாக ''கலோசோ புறூக்கஸ் மகியுலேட்ஸ்'' என்னும் பயத்தை வண்டு காணப்படுகிறது. இதன் தாக்கத்தால் விதைப்பரப்பில் துவாரம் உண்டாகும். விதையின் ஓர் பகுதியை உண்பதால் சந்தை மானம் குறைவடைவதும், களஞ்சியப்படுத்தல் பாழடைவதும் அவதானிக்கப்படுகிறது.

ஆமணக்கு எண்ணெயும் (விளக்கெண்ணெய்), நிலக்கடலை எண்ணெயும் சிறந்ததாக உபயோகிக்கப்படுகின்றது. தாவர எண்ணெய் ஒரு கிலோவிற்கு 5மி லீட்டர் (13 இறாத்தல் விதைக்கு ஒரு திராவக அவுன்ஸ்) என்ற விகிதத்தில் விதைகளுடன் ஒருமுறை கலப்பதன் மூலம் குறைந்தது 6 மாதங்களுக்கு பாதுகாக்கலாம்.

போஞ்சி அவரை விதைகளைப் பாதுகாக்க சோளம் எண்ணெய் அல்லது பருத்தி எண்ணெயைப் பவிக்கலாம். தேங்காய் எண்ணெய் விரும்பத்தக்கது அல்ல, பாண்டல் தன்மையை உண்டு பண்ணும். விதைகளுடன் குறிப்பிட்ட அளவு எண்ணெயை ஓர் பொலித்தீன் பையினுள் இட்டு நன்றாக இரண்டறக் கலக்கும் வரை பையைக் குலுக்குதல் வேண்டும். பெரும் அளவில் விதைகளுடன் கலக்க வேண்டுமாயின் ஓர் சுழலும் இயந்திரத்தில் விதைகளை எண்ணெயுடன் கலக்கலாம்.

இவ் எண்ணெய்கள் விதைகளின் உருசியைப் பாதிப்பதில்லை. துர்நாற்றம் ஊட்டுவதும் இல்லை பூச்சி நாசினியை விட இம்முறை இலாபகரமானதாகும்.

இவ் எண்ணெய் இரு முறைகளில் செயற்படுகின்றன.

(1) வண்டின் முட்டைக் கோதின் வெளிப் பரப்பில் ஓர் முனையில் பல மயிர் கொண்ட துவாரம் காணப்படும். இதனூடாகவே விருத்தியடையும் கருவிற்கான பிராணவாயு எடுக்கப்படும். எண்ணெய் இத்துவாரத்தினூடு சென்று அடைப்பதால் கரு சிறிது நேரத்தில் இறக்கின்றது. இவ்வாறு தாவர எண்ணெய் முட்டை பொரிக்காது பாதுகாக்கின்றது.

(2) விதை மீது காணப்படும் எண்ணெய் காரணமாக மூதிர் வண்டுகளால் இடப்படும் முட்டைகளின் எண்ணிக்கையும் 50 வீதம் குறைவடையும். அவ் இலகுவான முறையை கையாண்டு பயத்தை தானியங்களைப் பாதுகாக்கலாம்.

- தமிழீழ ஆய்வு நிறுவனம் -

# வடக்கு ஈராக்கினுள் இரண்டாவது அகதிமுகாம்

(பாக்தாத்)

வடக்கு ஈராக்கில் குர்திஷ் இன அகதி மக்களுக்கான இரண்டாவது முகாமை அமைக்கும் வேலையில் அமெரிக்கா தலைமையிலா கூட்டணிப் படைகள் ஈடுபட்டு வருகின்றன.

10,000 குர்திஷ் இன மக்களுக்கான இரண்டாவது அகதி முகாம் ஒன்றை அமர்தியா நகரத்திற்கு அருகே அமெரிக்கா, பிரித்தானியா, நெதர்லாந்தின் இராணுவத்தினர் அமைத்துவருகின்றனர்.

இதேவேளை துருக்கி-ஈராக்கிய எல்லைப் பகுதியில் உள்ள ஒரு அகதி முகாமில் ஒரு சம்பவம் நடந்ததை அடுத்து 72 மணிநேரத்தில் நாட்டை விட்டு வெளியேறுமாறு 30 பிரித்தானிய படைகளை துருக்கி கேட்டுள்ளது.

## ஆப்கானிஸ்தானின்

# நிலைமையைக் கண்டறிய ஐ.நா. செயலருக்கு அழைப்பு

(காபுல்)

ஆப்கானிஸ்தானின நிலைமையை கண்டறிய நேரில் வருமாறு ஐ நா. சபையின் பொதுச் செயலாளர் பெரஸ் டி கொயிலருக்கு ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் அப்துல் வகீம் அழைப்பு விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானின் உள்விவகாரங்களில் பாகிஸ்தான் மீண்டும் மீண்டும் தலையிடுகிறது என்று குற்றஞ் சாட்டிய அப்துல் வகீம் பாகிஸ்தானின் ஆக்கிரமிப்புப் பற்றிய மறுக்க முடியாத சான்றுகளைக் கொண்ட ஆவணம் ஒன்றை விரைவில் வெளியிடப் போவதாக தெரிவித்தார்.

# உணவு விநியோகம் ஆரம்பம்

(சுச்சமோட்டை)

யாழ்ப்பாணத்தில் உள்ள பலநோ. கூ. சங்க கிளைகளுக்கு 38-ம் கட்ட உலர் உணவுக்குரிய பொருள்கள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் உணவுப் பொருள்கள் விநியோகம் நேற்றில் இருந்து ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் யாழ். பல நோ கூ சங்க பதில் பொது முகாமையாளர் சு பரம்சோதி தெரிவித்துள்ளார். தமது சங்கத்தில் போதியளவு உணவுப் பொருள்கள் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (43,

# கூட்டுறவு அமைப்பு மக்கள் மயப்படுத்தப்படும்

(கொழும்பு)

கூட்டுறவு அமைப்பு அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில இருந்து நீக்கப்பட்டு மக்கள் மயப்படுத்தப்படவுள்ளது என்று உணவுக கூட்டுறவுத் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான மசோதா விரைவில் பாராளுமன்றத்தில்சமர்ப்பிக்கப்படும் என்றும், அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆனால் புதிய கூட்டுறவு அமைப்பு ஆரம்பிக்கப்பட்டதும் அரசாங்கம் பின்னணியில் இருந்து அபிவிருத்தி வழிமுறைகளை வழங்கி ஆலோசனை பெறும் வகையிலேயே செயற்பட உள்ளதாகவும் மேற்படி அமைச்சு தெரிவித்துள்ளது.

## தேர்தல்

வடமராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளுக்கான கிளைக் குழு உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் மே மாதம் 11ஆம் திகதி நடைபெறவுள்ளது.

# பங்களாதேஷ் புயலினால் 5000 கோடி ராக்கா சேதம்

பங்களாதேஷில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற புயல் காற்றினால் பயிர்கள் உட்பட உடைமைகளுக்கு ஏற்பட்ட சேதம் 5000 கோடி ராக்கா (பங்களாதேஷ் நாணயம்) என மதிப்பிடப்பட்டுள்ளது.

நிலைமையை சமாளிக்க உடனடியாக 200 கோடி ராக்கா பங்களாதேஷிற்கு தேவைப்படுகிறது என்று உதவி மறுவாழ்வுத்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக 5 கோடியே 60 இலட்சம் டொலர் சர்வதேச உதவி வழங்க வேண்டுமென்று பங்களாதேஷ் கேட்டுக் கொண்டிருக்கிறது. உயிர் தப்பிய மக்களுக்கு உதவிப் பொருள் விநியோகிக்க 20 ஹெலிகொப்டர்களை அனுப்புமாறும் கேட்டுக் கொண்டது.

இதே வேளை இந்தியா ஒன்றரைக் கோடி ரூபாவையும் மூன்று ஹெலிகொப்டர்களையும் வழங்கியுள்ளது. பிரித்தானியா 40 இலட்சம் டொலர்கள் உடனடியாக வழங்கியுள்ளது.

## பஞ்சாப்

# போராளிகளுடனான பேச்சு கைவிடப்படாது

- சந்திரசேகர்

(லக்னோ)

பஞ்சாப்பில் போராளிகளுடனான பேச்சு வார்த்தைகள் எந்த ஒரு நெருக்கடியினாலும் கைவிடப்படமாட்டாது என்று இந்தியப் பிரதமர் எஸ். சந்திரசேகரர் தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தில் நடந்த பொதுக் கூட்டமொன்றில் பேசிய சந்திரசேகர் பஞ்சாப்பில் இன்று காணப்படும் நிலைமைக்கு இந்திரா காங்கிரஸ் கட்சி தான் காரணம் என்று கூறிய அதே நேரம இவ்விடயம் குறித்து மத்திய அரசாங்கம் பேச்சு வார்த்தைகள் நடத்துவதை அக்கட்சி விரும்பவில்லை என்றும் கூறினார்.

## அமெரிக்காவில்

# குண்டு வெடிப்பால் 8 பேர் பலி, 125 பேர் காயம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் இரசாயன உரத்தொழிற்சாலை ஒன்றில் ஏற்பட்ட வெடிகுண்டு விபத்தில் எட்டுப் பேர் பலியாகியுள்ளனர். நூற்றி இருபத்தைந்து பேர் காயமுற்றனர்.

நேற்று முன்தினம் நியூ ஒலியன்ட் அருகேயுள்ள இரசாயன தொழிற்சாலையொன்றில் வைக்கப்பட்ட குண்டு வெடித்தால் ஏற்பட்ட தீயினால் இந்த உயிர் இழப்புக்கள் ஏற்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதே நேரம் இப்பகுதியை சுற்றியிருந்த மக்கள் அனைவருமே அங்கிருந்து அகற்றப்பட்டு விட்டதாகவும் இன்னமும் ஏழு தொழிலாளர்களை காணவில்லை என்றும் பொலிசார் தெரிவித்தனர். குண்டு வெடிப்பிற்கான காரணம் இதுவரை கண்டு பிடிக்கப்படவில்லை.

# திங்கள் முதல் ஓய்வூதியம் வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கிக் கிளையில் கடந்த பங்குனி மாதத்திற்கான ஓய்வூதியப் பணம் திங்கட்கிழமை முதல் வழங்கப்படவுள்ளன.

இவ்ஓய்வூதியக்காரருக்கான கொடுப்பனவுகள் பணமாக வழங்கப்படும் என வங்கியின் பிரதான முகாமையாளர் தெரிவித்துள்ளார்.

# சிறுதானிய விநியோகம்

(கொழும்புத்துறை)

அல்வாய் தெற்கு பாரதிதாசன் சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கத்தினால் இப்பகுதியில் உள்ள 119 விவசாயிகளுக்கு மண்ணெண்ணையும் உப உணவுச் செய்கைக்கென சிறுதானியங்களும் வழங்கப்பட்டன. (24)

○ குறைந்த விலை ○ நிறைந்த தரம் ○ சிறந்த சேவை

★ மின்சாரப் பொருள்கள் ★ புடைவை வகைகள் ★ கண்ணாடிப் பாத்திரங்கள்
★ பிளாஸ்ரிக் வகைகள் ★ சிறுவர் சிறுமியர் விளையாட்டுப் பொருள்கள்
★ பாடசாலை அலுவலக உபகரணங்கள் ★ எவர்சில்வர், அலுமினியப் பாத்திரங்கள் ★ அழகுசாதனப் பொருள்கள்

இன்னும் உங்களுக்குத் தேவையான சகல பொருள்களையும் ஒரே இடத்தில் வசதியாகப் பெறுவதற்கு

எழிலகத்திற்கு விஜயம் செய்யுங்கள்

குறிப்பு : சிங்கப்பூர், அமெரிக்க கரன்சிகள் மாற்றியும் கொடுக்கப்படும்.

எழிலகம்

மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

எமது ஸ்தாபனம் ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில் காலை 9.30 மணிமுதல் மாலை 6.00 மணிவரை திறந்திருக்கும் என்பதை அறியத்தருகின்றோம்.

(B-2468)

# 'தமிழரின் தாகம்'
## கவிதை நூல் அறிமுகவிழா

(நமதுநிருபர்)

கவிஞர் மு. வே. யோ. வாஞ்சிநாதன் அவர்களின் ''தமிழரின் தாகம்'' கவிதை நூல் அறிமுக விழா வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் முறைசாராக் கல்வி அதிகாரி ச சுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் (மகளிர்பிரிவு) நடை பெறவுள்ளது.

இந்நூலுக்குரிய சிறப்புரையை வடமராட்சி இணைப்பாளர் திரு சூசை அவர்களும் ஆய்வுரைகளை கி. ராசா. எஸ். சி எஸ் சிதம்பரநாதன், க சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் நிகழ்த்தவுள்ளனர். முதற் பிரதியை சு சண்முகசுந்தரம் அவர்களும், எம் ராஜகோபால் அவர்களும் பெற்றுக்கொள்ள உள்ளனர்.

## கொழும்புத்துறையில் இரு அகதி முகாம்கள்

(ஈச்சமோட்டை)

தீவுப்பகுதியில் இருந்து இடம் பெயர்ந்தவர்களை குடியமர்த்துவதற்கு கொழும்புத்துறையில் 2 அகதி முகாம்கள் திறக்கப்பட்டுள்ளன துரையப்பா மகாவித்தியாலயம், சென். யோசப் மகாவித்தியாலயம் ஆகிய 2 முகாம்களிலும சுமார் 300 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருக்கின்றனர். இவர்களுக்கு யாழ் செயலக உதவியுடன் சமைத்த உணவு வழங்கப்பட்டு வருகின்றன. 43) (24)

## மாணவர் உணவு முத்திரைகளுக்கு உள்ளூர் உற்பத்திப் பொருள்கள்

(யாழ்ப்பாணம்)

வடக்கில் இம்முறை உப உணவு உற்பத்தி மேற்கொள்ளப்பட்ட மொத்த நிலப்பரப்பில் 25 வீதமான நிலப்பரப்பிலேயே எதிர்பார்த்தளவு விளைச்சல் கிடைத்துள்ளதாக யாழ் மேலதிக அரசாங்க அதிபர் சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

இம்முறை பதின்மூவாயிரம் ஏக்கர் நிலத்தில் உப உணவுகளான பயறு, உளுந்து, எள்ளு ஆகியன பயிரிடப்பட்டவை இவற்றில் மூவாயிரத்து நூறு ஏக்கரில் எதிர்பார்த்தளவு விளைச்சல் கிடைத்துள்ளதாகவும் ஏனையவற்றில் பயிரிடப்பட்டவை பயிர்நோய்கள், எரிபொருள் தட்டுப்பாடு, போதியளவு பராமரிப்பின்மை ஆகிய காரணங்களால் எதிர்பார்த்தளவு விளைச்சலைத் தரவில்லை எனவும் அவ தெரிவித்தார்.

உற்பத்தி செய்யப்பட்டவற்றில் எள்ளு எழுபது வீதமும் உளுந்து அறுபதுவீதமும் பயறு நாற்பது வீதமும் விளைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. விரைவில் இவற்றுக்கான உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படவுள்ளன. இவற்றை பலநோக்குக் கூட்டுறவு சங்கங்கள் கொள்வனவு செய்து மாணவ உணவு முத்திரைக்கு விநியோகம் செய்ய முன்வந்துள்ளன. இந்த உப உணவுப் பயிர்ச் செய்கை இதுவரை காலமும் வட பகுதியில் பெருமளவில் மேற் கொள்ளப்படுவது மிகக் குறைவு. இம்முறையே இந்த உப உணவுப் பயிர்ச் செய்கை வட பகுதியில் மிகக் கூடியளவு நிலப்பரப்பில் மேற் கொள்ளப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

# தமிழீழ காவல்துறை
## பதவி வெற்றிடங்களுக்கான
## விண்ணப்பம்

காவலர்களுக்கான தகைமைகள்:

(1) வயது எல்லை: 18 வயது முதல் 30 வயது வரை
(2) உயரம்: 5 அடி 6 அங்குலம்
(3) கல்வித் தகைமை: எட்டாம் வகுப்பு முதல் க. பொ. த. (சாதாரண தரம்) க. பொ. த. (உயர்தரம்) வரை

விண்ணப்பதாரிகள் இம்மாதம் 07-05-1991 இற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். பிரதேசக் காரியாலயத்தில் சான்றிதழ் பிரதிகளுடன் சமுகமளிக்கவும்.

பொறுப்பாளர்,
தமிழீழக் காவல்துறை.

(B-2456)

## வீட்டு இலக்கங்களை தெளிவாக எழுதவும்

மக்கள் தமது வீட்டு கேற்றுக்கு முன்னால் புதிய, பழைய நம்பர்களை (No) மிகவும் தெளிவாகவும் துலக்கமாகவும் எழுதவேண்டும் என யாழ் தபாலக வட்டாரம் தெரிவித்துள்ளது. இதனால் தபால்களை விநியோகிக்கும் தபாற்காரருக்கு மிகவும் சுலபமாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது அது மட்டும் அல்ல வெளிநாடுகளில் இருந்து தபால்களை போடுகிற வர்கள் விலாசங்களை சரிவர எழுதி அனுப்பவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (43)

## திருத்த வேலை

இராணுவ நடவடிக்கைகளினால் சேதமடைந்த கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையைச் செஞ்சிலுவைச் சங்கம் 40 ஆயிரம் ரூபா செலவில் திருத்தி அமைத்துள்ளது.

செலவு செய்யப்பட்ட 40 ஆயிரம் ரூபாவும் பின்னர் சுகாதாரப் பகுதியினால் செஞ்சிலுவைச் சங்கத்திற்கு வழங்கப்படுமென கிளிநொச்சி செஞ்சிலுவைச் சங்க செயலாளர் திரு. குணரத்தினம் தெரிவித்தார். (49)

# தமிழீழ காவல்துறை
## பதவி வெற்றிடம்

### 1, கணக்கு லிகிதர்

வயது:- 25 - 45
தகைமை:- கணக்குத் துறையில் குறைந்தது 5 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

### 2. நிர்வாக உத்தியோகத்தர்

தகைமை:-நிர்வாகத்துறையில் அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்

பொறுப்பாளர்
தமிழீழக் காவல்துறை

(B-2457)

## இடமாற்றம்

வட்டுக்கச்சிக் கோட்டக்கல்வி அதிபராக இருந்த பசுபதி அரியரத்தினம் கல்வி நிர்வாக சேவை தரம் 3 பதவி உயர்வு பெற்று பளைக், கொத்தணி அதிபராக 01-05-1991 தொடக்கம் இடமாற்றம் பெற்றுள்ளார்.

# பதவி வெற்றிடம்
## தொழில்நுட்பஉத்தியோகத்தர்கள்

பனம் சீவி தொழிற்சாலைகள், வடிசாலைகள் என்பனவற்றிற்கு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர்.

தகைமைகள்:- (1) விஞ்ஞான பட்டதாரிகள் அல்லது
(2 க.பொ த. (உயர்தரம்) விஞ்ஞான முப். தொழில் அனுபவம் 2 வருடங்கள் அல்லது
(3) தொழில்நுட்பக் கல்லூரி சான்றிதழ்களுடன், ஒரு வருட அனுபவம் அல்லது
(4) மேற்படி தொழிற்சாலைகளில் வேலை செய்த 3 வருட அனுபவம்

சம்பளம்:- ரூபா. 2000 - 5000 வரை

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-
பனை தென்னை வள அபிவிருத்தி ஒன்றியம்,
25, பொன்னப்பா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

B-2464))

# 45ஆம் நாள் நினைவஞ்சலி

தமிழினது பூமியிலே
தமிழனுக்கு உரிமை இல்லை
கொடுமை இதைக் கண்டதினால்
கொதித் தெழுந்த மாவீரன்!
புதுவை மண்ணின்
புரட்சி பூவே ''சூரியகுமாரன்'
களம் பல கண்ட
களப் புலியவன்!
சிறிலங்கா இனவெறி கூலிகளின்
செறுத்தை அடக்கிட
சிறு கொள் வேங்கையாகி
சிலாவத்துறை தனிலே!
சிந்திவிட்டான் செங்குருதிதனை!
இன்றெல்லாம்
இளமையின் வசந்தங்களை
ஈழமண்ணுக்காய் அர்ப்பணித்த
இளநல் வேங்கையே!
''சூரியகுமாரா''
ஈழமண்ணிலும் எம் இதயங்களிலும்
உன்புகழ் அழியாத கோலங்கள்!
இணையற்ற — உன்
இலட்சிய பயணத்தில்
பாதச் சுவடுதனை நோக்கி — எம்
பயணங்கள் தொடரும்!



வீரவேங்கை
## சூரியகுமார்
(கனகராசா லிங்கேஸ்வரன்)
தாயின் மடியில்: 24-01-1972
தமிழீழ மண்ணில். 21-03-1991

எமது புதல்வனின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், எமக்கு பலவழிகளிலும் உதவியும், ஒத்தாசையும் வழங்கியோருக்கும் எமது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றோம்.

—பெற்றோர், சகோதர சகோதரிகள், மைத்துனர்மார், உற்றார், உறவினர்கள், நண்பர்கள்

ஐயர் வீதி,
புத்தூர்.

( 2663

# 91-ம் நாள் நினைவஞ்சலி

வீரஜனனம்:
15 - 06 - 1974
வீரமரணம்:
02 - 02 - 1991



## வீரவேங்கை செந்தில்
(செல்லப்பா சுரேஸ்குமார்)

நெஞ்சம் மறக்கவில்லை
அன்று
விமன்காமத்தில் துப்பாக்கியோடு
விளையாடிய உன் விரல்கள்
வீழ்ந்து விட்டதோ
செந்தில் வீரனே . உன்
அன்னை அன்று தந்தாள்
உன்னை இம் மண்ணுக்கு
நீ எம்மை விட்டு ஏன்
சென்றாய் அந்தவிண்ணுக்கு
விடுதலை வேள்விக்கு
உதிரத்தை ஆகுதியாய் தந்தாயே
மறவனே மறப்போமா உன்னை
இம் மறவனை
அளவெட்டி தந்த செல்வனே - உன்
ஆருயிர் ஆவியை தந்தாயே
இம் மண்ணுக்கு
நாளை தமிழீழத்தில் பொறிக்கப்படும்
உன்பெயர் பொன்னால்

அளவெட்டி வடக்கு குடும்பத்தினர்.
(B 1369)

### சிந்தனைக்கு

போருக்கு ஆயத்தமாய் இருப்பதே, சமாதானத்தைப் பாதுகாப்பதற்குப் பயனான வழிகளில் தலையாயது.

— ஜார்ஜ் வாஷிங்டன்


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 04-05-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண்: 05


## அதிகாரம் அற்றவரிடம் பேசிப் பயனில்லை

இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காண முடியாது என்பதை இன்று அனைவரும் ஏற்றுக் கொண்டுள்ளனர் எனச் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசா காலிமுகத்திடலில் மேதினக் கூட்டத்தில் பேசும் போது தெரிவித்துள்ளார். அண்மைக் காலமாக இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு காணப்பட முடியாது என சிறிலங்கா ஜனாதிபதி அடிக்கடி பல மேடைகளிலும் கூறிவருகின்றார்.

ஆனால், வடக்கு கிழக்கில் இராணுவ நடவடிக்கைகள் குறையவில்லை. அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்படுவதும், கைது செய்து சித்திரவதை செய்யப்படுவதும், அவர்கள் உடைமைகள் சூறையாடப்படுவதும், அழிக்கப்படுவதும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

சிறிலங்கா ஜனாதிபதிக்கு இராணுவ நடவடிக்கையில் நம்பிக்கை இல்லை, அதில் வெற்றி பெற முடியாது என்றால் இதனை ஏன் தொடர வேண்டும்? அவ்வாறில்லாவிடில் தமிழருக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை சிறிலங்கா ஜனாதிபதியின் ஆணையின்றி யாராவது மேற்கொள்கின்றார்களா?

சிறிலங்கா ஜனாதிபதிக்கு யுத்தத்தில் நம்பிக்கை இல்லை என்றால் பேச்சுவார்த்தைக்குரிய சூழ்நிலையை ஏன் உருவாக்கவில்லை? விடுதலைப் புலிகள் ஜனவரி மாதம் அறிவித்த ஒருதலைப்பட்சப் போர் நிறுத்தத்தை ஏன் அரசாங்கம் பேச்சுவார்த்தைக்குரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்தவில்லை?

விடுதலைப் புலிகளைப் பொறுத்து நிபந்தனையுடன் கூடிய பேச்சுவார்த்தைக்கோ அன்றி அழுத்தத்துடன் கூடிய பேச்சுவார்த்தைககோ ஒருபோதும சம்மதிக்க மாட்டார்கள் என்பதை விடுதலைப்புலிகள் தற்பொழுது கூறித்தான் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதல்ல. கடந்த கால புலிகளின் செயற்பாடே அதைக் காட்டும். இராணுவ அழுத்தத்திற்கு புலிகள் ஒருபோதும் பணிந்து விடுவதில்லை என்பது உலகறிந்த உண்மை. இதனை மீண்டும் ஒரு தடவை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் மேதினக் கூட்டத்தில் தமது உரையின்போது தெளிவுபடுத்தியுள்ளார்.

அத்தோடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு விடுதலைப் புலிகள் உருவாக்க முனைந்த யுத்த நிறுத்த சூழலை சிறிலங்கா அரசாங்கம் பற்றிக் கொள்ளவும் இல்லை. தானாக அவ்வாறானதொரு சூழலை உருவாக்கவும் இல்லை.

ஆனால், இராணுவ நடவடிக்கைகள் பயனற்றவை என சிறிலங்கா ஜனாதிபதி தொடர்ச்சியாகப் பேசி வருகின்றார். அவ்வாறாயின் சிறிலங்கா ஜனாதிபதியின் பேச்சில் எந்தளவில் உண்மை உள்ளது? தமிழ்மக்கள் நம்பிக்கை எந்தளவில் கொள்வது? பேச்சுவார்த்தையின் முக்கியத்துவத்தை சகலரும் உணர்ந்துள்ளனர் என்றால் அதை உருவாக்க சிறிலங்கா ஜனாதிபதி தயங்குவானேன்?

அவ்வாறில்லாவிடில் இன்று வடக்கு கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை சிறிலங்கா ஜனாதிபதியால் தீர்மானிக்க, கட்டுப்பண்ண முடியாமல் உள்ளதா? அவ்வாறாயின் தமிழரும் சிறிலங்கா ஜனாதிபதியுடன் இனப்பிரச்சினை தொடர்பாகப் பேசிப் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை. அதிகாரம் உள்ளவர்கள் இடம் இருந்துதான் அவற்றைப்பெற முடியும். ஆகையினால் சிறிலங்காவில் இனி யார் அதிகாரம் உள்ளவர்களாக இருக்கின்றார்களோ அவர்களிடம்தான் இனித் தமிழர் பேசவேண்டும். பேச முடியும்.

இந்நிலையில், தமிழர் பிரதேசம் முழுமையாக இன்று இராணுவச் சட்டத்தின் அடிப்படையில் நிர்வகிக்கப்படும் பகுதிகளாகவே இருக்கின்றன. சிவில் நிர்வாகத்தை மேற்பார்வையிட இராணுவ இணைப்பதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். கொழும்பில் அனுமதி அளிக்கப்படும் பொருள்களுக்கே இராணுவம் வவுனியாவில் தடைவிதிக்கின்றது. ஆகையினால் அதிகாரம் இராணுவத்தின் கையில்தான் இருக்கின்றது என்பதே உண்மை. இந்நிலையில் தமிழர் தமது பிரச்சினைகளைத் தீர்க்க இனிச் சிறிலங்கா இராணுவத்துடனேயே பேச வேண்டியுள்ளது. இராணுவத்துடன் பேசுவதென்பது வழமையாக அவர்கள் பாணியில் துப்பாக்கியால்தான் பேசமுடியும். எனவே தமிழர் தாயகத்தில் இருந்து சிங்கள இராணுவத்தினரை விரட்டுவதே இனப்பிரச்சினை தீர்விற்கு ஒரே வழியாக அமைய முடியும்.

## இந்திய, சிறிலங்கா வறட்டுக்கௌரவம்

# புலிகள் தலைமைத்துவத்தை ஏற்க இடம் தரவில்லை

**தகவல்: ஏ. ராம்.**

**(இந்து நாளேட்டின் சிரேட்ட ஆசிரியரும் 1987ஆம் ஆண்டின் இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் பேச்சுவார்த்தைகளின் முக்கிய பங்காளியுமாவார்.)**

சிறிலங்காவின் முடிவற்ற இனப்பிரச்சினைக்கு முற்றுப் புள்ளியிட வெளியிடப்பட்ட போர்நிறுத்தமானது விடுதலைப் புலிகள் பலமிழந்த நிலையில் விடுக்கப்பட்டதென சிங்கள இனவாதக் கும்பல் கூச்சலிடுவது முற்றிலும் தவறானதாகும்.

உண்மை என்னவென்றால் தமது உயிர்களையும் மதியாது சளைக்காமல் கொண்ட இலட்சியத்திற்காக போராடி வரும் விடுதலைப் புலிகள் போர்க்கள நிலைமைகளை பரிசீலித்து மேலதிக நன்மை கருதி எடுக்கப்பட்ட தந்திரோபாய நடவடிக்கையாகும்.

இப் போர்நிறுத்தம் நீண்ட காலம் நீடிக்கவில்லை.

அரசியல் ரீதியாக இப்பிரச்சினை தீர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கின்றது. டிவிசார் அரசியல் சூழ்நிலை காரணமாக அடைய முடியாத தமிழ் ஈழ கோரிக்கை ஒரு புறம், ஒற்றையாட்சியின் கீழ் தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்படும் சிங்கள பேரினவாதம் ஒரு புறம் எனப் பிரச்சினை இரு துருவங்களாக பிரிந்து நிற்கின்றது.

இனப் போர் நடந்துகொண்டிருக்கும் பகுதிகளில் தமது அரசியல் கொள்கைகளுக்கு ஏற்ப போருக்கான அல்லது சமாதானத்திற்கான நிலைமைகளை தீர்மானிக்கக்கூடியவர்களாக போராளிகள் இருக்கின்றனர்.

போரினால் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள், துன்பங்கள் தம்மை விடுதலைப் போராளிகள் என கருதுபவர்களில் தந்திரோபாயங்களில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராக கொடூரமான தாக்குதல் நடத்துவதுதான் சிறிலங்கா அரசுக்கு தெரிந்த வழிமுறையாக இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக அடக்கலாம் என்ற பேச்சு சிறிலங்கா அரசியலில் ஓர் அர்த்தமற்ற, பயனற்ற நடைமுறைப்படுத்த இயலாத பேச்சாகவே கருதப்படுகின்றது.

இராணுவத் தீர்வு என்பதன் ஆரம்ப கதாநாயகனான லலித் அத்துலத் முதலியில் இருந்து, தாம் ஒரு கையை பின்னால் கட்டிக்கொண்டு விடுதலைப் புலிகளை பலமிழக்க வைக்கிறோம் என்ற இந்தியப்படையில் இருந்து, கூக்குரலிடும் கடும்போக்காளரின் தலைவர் ரஞ்சன் விஜேரட்னா வரை கதை ஒன்றுதான்.

விடுதலைப் புலிகளை அடக்கி ஒடுக்க முயற்சித்தவர்களின் செயல் நோக்கங்கள், தன்மைகள் என்பன கணிசமான அளவில் வேறுபட்டிருந்த போதிலும் எல்லோரும் முடிவில் ஒரே மாதிரியான கசப்பான பாடத்தினையே படித்தார்கள்.

எந்தவொரு மரபுவழி முறையிலும் இந்த யுத்தத்தினை வெல்ல முடியாது. இனப்படுகொலைக்குக் குறைவான எந்தவொரு முறையினாலும் நீரில் மீன் போல் இருக்கும் விடுதலைப் புலிகளை அழிக்க முடியாது.

சிங்கள தமிழர் உறவுகள் எந்த அளவில் துப்பாக்கி முனையில் பிளவுபட்டு நிற்கின்றதோ அதே அளவு சமூக அரசியல் அரங்கிலும் பிரிந்து நிற்கின்றது.

இதே காரணத்தினால்தான் 1986 - 87இல் நடந்த வடமராட்சி இராணுவ நடவடிக்கையானது தமிழ் மக்களைப் பணிய வைப்பதில் தோல்வியடைந்தது.

வெல்ல முடியாத இக்காரணியினாலேயே, 1987 ஜூலை 27ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் இந்தியா தனது பங்கினை நிறைவேற்றுவதற்கு எடுத்த முற்போக்கான முயற்சி பாரிய இழப்புடன் அல்லது செலவுடன் தோல்வி அடைந்தது.

1987 - ஒக்ரோபர் மாதம் புலிகளைத் தேடி இந்திய சமாதானப்படை சென்றதற்கு முதல் நாள் இந்திய இராணுவ ஜெனரல் ஒருவர் 'திரு. ராம் அவர்களே நாங்கள் இங்கு என்ன செய்கிறோம்? இதனை நிறைவேற்றுவதற்குக் குறைந்தது 30 வருடங்களாவது எடுக்கும், ஆனால் நாம் கட்டளைகளை நிறைவேற்றுகின்றோம். இவ்விடயத்தில் எம்மால் செய்யக்கூடியது வேறெதுவும் இல்லை' எனக் கூறினார்.

இந்தியாவின் நடைமுறையில் சிறிலங்கா அரசும், விடுதலைப் புலிகளும் கொண்டிருந்த இயல்பான வெறுப்புக் காரணமாக அவர்களிடையே ஏற்பட்ட 'பேச்சுக்கள்' பதினான்கு மாதங்களின் பின் 1990 ஜூன் 11ஆம் திகதி முறிவடைந்த பின்பு ஜனாதிபதி பிரேமதாசா இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டதற்கும் இக்காரணியே காரணமாகும்.

1983 ஆம் ஆண்டு தொடக்கம் 1985 ஆம் ஆண்டு காலம் வரை ஜனநாயகவாதிகளுடன்தான் பேசுவோம் என்ற நிலைப்பாடு இருந்து வந்தது. இந்திய தரப்பினர் தமிழர் விடுதலைக் கூட்டணியினரைப் பேச்சுவார்த்தைக்குத் தயாராக்கி வந்தனர். மறுபுறத்தில் தீவிரவாத இயக்கத்தினரை பயிற்றுவித்து ஆயுதமளித்து பேச்சுவார்த்தைகளின்போது அழுத்தத்தைப் பிரயோகிக்க எண்ணியிருந்தனர். எது எப்படியிருப்பினும் 1983ஆம் ஆண்டு ஆடி ஆவணி மாதங்களின் இனக்கலவரத்தின் பின் இவ்வழிமுறைகள் வெற்றி பெற்றிருக்குமென இன்று நம்புவதற்கிடமே இல்லை. இந்நாட்டின் இனப்பிரச்சனைக்குத் தீர்வே இல்லையென்னுமளவில் அரசியல்நிலைமை காணப்பட்டது. தமிழீழ விடுதலைப் புலியினர் தலைமைத்துவம் அவர்களின் இராணுவ பலத்தினாற்றான் என்பது பொய். கடந்த ஐந்தாண்டு காலமாகக் காணக் கூடிய உண்மையென்னவெனில் போராட்டகளமான அப்பிரதேசத்தில் விடுதலைப் புலிகளை விட்டு எதையும் செய்ய முடியாது. தமிழீழ விடுதலைப் புலிகளைத் தவிர்ந்த ஏனையோருடன் பேசுவது ஆற்றிலே புளி கரைத்தாற் போன்றதாகும்.

உண்மைநிலை இப்படி இருக்க வேலுப்பிள்ளை பிரபாகரனின் விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ள இந்திய, சிறிலங்காவின் ஜனநாயகவாதிகளின் வறட்டுக் கௌரவம் இடம் தரவில்லை.

இந்திய சிறிலங்கா ஒப்பந்தத்தின் ஊடாக இந்தியாவின் நேரடியான தலையீட்டின் மூலம் இனப்பிரச்சினையை தீர்க்க முயன்றது போல பல தீர்வுகள் செயலற்றுப் போனதில் இருந்தாவது உண்மைகளை ஏற்றுக் கொள்ளும் தன்மையை பெற வேண்டும்.

விடுதலைப் புலிகள் அப்பாவி பொது மக்கள் மீதும், அரசியல் எதிரிகள் மீதும் தயவு தாட்சண்யமில்லாமல் கொடூரமாக நடாத்தும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் தான் தங்களின் சமத்துவத்திற்கும், பாதுகாப்பிற்கும் முன்னின்று போராடுபவர்கள் என்பது தெரியும். தமிழ் மக்களால் அன்பாக சில வேளைகளில் வெறுப்பாக எங்கடை பெடியள் என்று அழைக்கப்படும் அவர்கள் ஓர் மாபெரும் அரசியல் சக்தியாகவே விளங்குகின்றனர். அவர்களை விட்டு பிரச்சினையை தீர்க்க முடியாது.

தமிழ் மக்களின் ஆதரவும் அனுதாபமும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குண்டு என்பதால் சுதந்திரமான தேர்தலுக்கு இவர்கள் சம்மதிக்க மாட்டார்கள் என்ற எண்ணம் உருவாக இடமளிக்கலாகாது. ஏனெனில் இது மிக முக்கியமானது. தெற்காசிய நாடுகளிற் காணப்படுகின்ற பலம் வாய்ந்து வளர்ந்த தீவிரவாத இயக்கங்களில் விடுதலைப்புலிகள் இராணுவ ரீதியில் வெகுதூரம் முன்னேறி முன்னணியில் நிற்கின்றனர்.

விடுதலைப்புலிகள் தலைமைப்பீடமானது அதன் குணாதிசயம், செய்முறைகள் எல்லாவற்றிலும் மானிட வாழ்வு பற்றி எவ்வித அக்கறையும் கொண்டிராத தன்மையில் பொல்பொட்டின் குணாம்சங்கள் இருந்த போதிலும் இந்திய இராணுவத்தில் கடமை புரியும் சிரேட்ட இராணுவ ஜெனரல் ''புலியைப் போல போர்த்திறன் பெற்றவர்களை இவ்வுலகில் வேறெங்கும் காண்பதரிது'' எனக் கூறினார்.

(தொடரும்)

## மருந்துக்குத் தட்டுப்பாடு

(கொழும்புத்துறை)

யாழ்.மாவட்டத்தில் அனேக உப அலுவலகங்களில் இயங்கி வரும் சித்த ஆயுர்வேத இலவச வைத்தியசாலைகளில் மருந்து வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இக்குறைபாடுகளை நிவர்த்திசெய்ய யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தம்மாலான சகலபணிகளையும் மேற்கொண்டு வருவது குறிப்பிடத்தக்கது. (24)

# பங்களாதேஷில் சூறாவளியால் ஒரு கோடி மக்கள் பாதிப்பு

(டாக்கா)

பங்களாதேஷில் கடந்த திங்கட்கிழமை ஏற்பட்ட சூறாவளியினால் ஒருகோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. மேலும் சூறாவளியினால் ஏற்பட்ட வெள்ளத்தால் சூழப்பட்ட மக்கள் ஐந்துநாள் ஆகியும் இன்னும் மீட்கப்படவில்லை எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பங்களாதேஷிற்கு தாராளமாக உதவிவழங்குமாறு ஐ.நா செயலாளர் பெரஸ்டி கொயிலர் சர்வதேச நாடுகளைக் கேட்டுள்ளார். மேலும் சேதங்களை மதிப்பிட ஐ.நா. நிவாரணக்குழு டாக்கா சென்றுள்ளது எனவும் செயலாளர் தெரிவித்தார்.

பங்களாதேஷில் வீசிய கடும் புயலின்போது சிட்டகாங் துறைமுகப் பகுதியில் சுமார் 60,000 பேரும், கரையோர நகரமான குர்க்ஸ்பஜாரில் சுமார் 29,000 பேரும், மற்றுமொரு கரையோர மாவட்டத்தில் 3,000 பேரும் பலியாகியுள்ளதாக தகவல்துறை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

அதேவேளை பங்களாதேஷில் ஏற்பட்டுள்ள வெள்ள அழிவில நீரினால் சூழப்பட்ட நிலையில் கடுமையான பட்டினியாலும், நோயினாலும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப் பொருள்களை அனுப்பிவைப்பதற்கு தம்மிடம் போதியளவு உணவோ, மருந்தோ அல்லது அவற்றைக் கொண்டுசெல்லும் உலங்குவானூர்திகளோ இல்லையெனவும பங்களாதேஷ் அரசு அறிவித்துள்ளது.

மணிக்கு 145 மைல் வேகத்தில் ஒன்பதுமணிநேரம் வீசிய கடும் சூறாவளியினால் பங்களாதேஷில் பெருமளவு போக்குவரத்துப் பாதைகளும், பாலங்களும் சேதமடைந்ததாகவும், தொலைத்தொடர்பு, மின்சாரம், நீர் விநியோகம் பாதிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# இந்தியாவால் வந்தோருக்கு நிவாரண கொடுப்பனவுகள்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து திரும்பிய அகதிகளுக்கான நிவாரண உதவிக கொடுப்பனவுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியில் இருந்து நண்பகல் 1.00 மணிவரை கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வழங்கப்படும் என செய்திட்டப் பணிப்பாளர் செ. பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

இக்கொடுப்பனவுகள்சென்ற மாதம் ஏழாம் திகதி வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டபோதும் தவிர்க்க முடியாத காரணத்தினால் வழங்கப்பட முடியவில்லை என்றும் இதற்கான கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும், முன்னர் கிடைக்கப் பெற்ற கடிதங்களுடனும் ஆவணங்களுடனும் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கரவெட்டி உதவிஅரசாங்க அதிபர் பணிமனையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் சமுகமளிக்கும்படி மேலும்அவர் தெரிவித்தார்.

# ஈராக்கின் ஆக்கிரமிப்பால் குவைத்திற்குப் பெருநட்டம்

(நியூயோர்க்)

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்ததால் குவைத் எமிரேட்சின் பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது என்று ஐ.நா சபை குறிப்பிட்டுள்ளது.

நேற்று முன்தினம் ஐ.நா சபை வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இருநூறு கோடி டொலருக்கும் அதிகமான சேதத்தை எண்ணெய்த்துறை கொண்டுள்ளது என்றும், பல எண்ணெய்க் கிணறுகள் எரிவதால் நாளொன்றுக்கு ஒன்றேகால் கோடிடொலர் இழப்பினைக் குவைத்சந்தித்து வருவதாகவும் தெரிவித்துள்ளது.

# மாவீரர் றோஜனுக்கு மடுவில் மக்கள் அஞ்சலி

## ஆயுதங்கள் பார்வைக்கு

(மன்னார்)

வஞ்சியன்குளத்தில் கடந்த திங்களன்று சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலில வீரமரணமடைந்த வீரவேங்கை றோஜனின் புகழுடல் பொதுமக்களின் அஞ்சலிக்காகவும், இராணுவத்தினரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள் பார்வைக்காகவும் மடுப்பகுதியில் வைக்கப்பட்டிருந்தன

இவ்வீரவேங்கைக்கு பெருந்தொகையான பொதுமக்கள் திரண்டுவந்து தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். தொடர்ந்து அஞ்சலிக்கூட்டம் இடம்பெற்றது. இவ்வஞ்சலிக் கூட்டத்தில் தலைமை வகித்த மடு பிரதேச அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் சுகி பேசும் போதுவீரவேங்கைறோஜனின் உறவினரும், குடும்பத்தினரும் இந்த மண்ணைவிட்டு வெளியேறும்போது இவன் இந்த மண்ணை மீட்கப் போராடிக்கொண்டிருந்தான்.இதிலிருந்து இவன் தன்தாயைவிட தன் மண்ணை அதிகம் நேசித்தான் என்பதை அனைவரும் புரிந்துகொள்ளவேண்டும். இவனது இலட்சிய வழிகாட்டலை நாம் ஏற்று பயணத்தைத் தொடர வேண்டும் என்றார்

தொடர்ந்து உரையாற்றிய மன்னார் மாவட்ட மாணவர் இபக்கப் பொறுப்பாளர் நிக்ஸன் பேசும்போது போராளியின் உடலையும் இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்களையும்நாம் கண்காட்சிக்காகவோ அன்றி எமது வெற்றியைப் பிரசாரம் செய்வதற்காகவோ உங்கள்முன் வைக்கவில்லை.

எங்கள் போராளிகளின் எண்ணிக்கையில் ஒருவன் குறைந்துவிட்டான் அவனின் இடத்தை நிரப்ப பலஇளைஞர்கள் வந்துசேருங்கள் என்பதனை உங்களுக்கு உணர்த்தவும்,இராணுவத்திடமிருந்து கைப்பற்றிய ஆயுதங்கள் வீரமரணமடைந்த போராளிகளின் ஆயுதங்கள் காயப்பட்ட போராளிகளின் ஆயுதங்கள் என்பன பெருந்தொகையாக எம்மிடமுள்ளன.

அவற்றை ஏந்துவதற்கு நீங்கள் வந்துசேரவேண்டும் என்பதனை உணர்த்துவதற்காகவுமே இவற்றைநாம் உங்கள் முன் பார்வைக்கு வைத்துள்ளோம். இதனை நீங்கள் நன்குணர்ந்து இவ் ஆயுதங்களை ஏந்த முன்வரவேண்டும் என்றார்.

அஞ்சலிக் கூட்டத்தைத் தொடர்ந்து வீரவேங்கை றோஜனின் புகழுடல் பரப்புக்கடந்தான் மாவீரர் மயானத்தில் விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதையுடன் நல்லடக்கம் செய்யப்பட்டது.

(மு)

# அகதிகளுக்குச் செலவு இருபத்திரெண்டரைக்கோடி

(மதுரை)

தமிழ்நாட்டில் ஒரு இலட்சத்து இருபத்திரெண்டாயிரம் இலங்கைத் தமிழர்கள் அகதிகளாகத்தங்கியுள்ளனர். இவர்களுக்காக இந்திய அரசு இதுவரை இருபத்திரெண்டரைக் கோடி ரூபா செலவிட்டிருப்பதாகத் தமிழ்நாடு அகதிகள் மறுவாழ்வுத்துறை சிறப்பு ஆணையாளர் இராம்தாஸ் கூறியுள்ளார். அவர் மேலும் தமிழ்நாட்டின் பதினேழு மாவட்டங்களிலுமுள்ள இருநூற்றிமுப்பத்தேழு முகாம்களில் அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்தார். அத்துடன் இலங்கை செல்ல விரும்பும் அனைவருக்கும் அனைத்து ஏற்பாடுகளும் செய்யப்படுவதாகக் குறிப்பிட்டார்.

# துருக்கி எல்லையை மூடியது

ஈராக்குடனான எல்லையைத் துருக்கி அரசு நேற்று முதல் மூடிவிட்டது. குர்திஷ் இன மக்களுக்கான நிவாரணப் பொருள்களை வழங்கும் திட்டத்தில் இதனால் தடங்கல்கள் ஏற்பட்டிருக்கிறது.

துருக்கிய அதிகாரிகளுக்குச் சினமூட்டும் வகையில் பிரிட்டிஷ் பத்திரிகையாளரால் கட்டுரை ஒன்று எழுதப்பட்டதன் விளைவுதான் இது எனச் சொல்லப்படுகிறது. இதன் விளைவாககூட்டுப்படைகளின் இராணுவப் போக்குவரத்தும் தடைப்பட்டுள்ளது. இதேவேளை புதன்கிழமைக்கு முன்னராக நடுநிலைப் பகுதிக்குள் ஐ.நா அதிகாரிகள் சென்றுவிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால் தெற்கு ஈராக்கிலிருந்து அமெரிக்கப் படைகள் வாபஸ் பெறப்படுவார்கள் என அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் டிக் செனி கூறியுள்ளார்.

## குளங்கள் புனரமைப்பு சிரமதானம்

தமிழீழ ஆய்வுநிறுவனத்தின் 1991 மே தின நிகழ்ச்சிகளில் ஒன்றான குளங்களை சிரமதானமூலம் புனரமைக்கும் திட்டத்தின் பிரகாரம் 1-5-1991 அன்று காலை 6-00 மணிக்கு யாழ்நகரப் பகுதி உற்பத்திக் குழுக்களினால் ஈச்சமோட்டைக் குளம் புனரமைக்கும் பணி சம்பிரதாயபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது. இப்பணியில் பெருந்தொகையானோர் ஆர்வத்துடன் பங்குகொண்டனர்.

## விசேட கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அனைத்துப்பீட மாணவர்களுக்குமான விசேட கூட்டம் ஒன்று இன்று மாலை மூன்று மணியளவில யாழ் பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில இடம்பெறவுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அனைத்து மாணவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

## கருத்தரங்கு

கல்வித்திணைக்களத்தினால் கடந்த வாரம் கல்விக்கோட்ட ரீதியாக நடாத்தப்பட்ட கல்விக் கருத்தரங்கில் கலந்துகொள்ளாத கொத்தணி அதிபர்கள், அதிபர்கள் அனைவரையும்நாளை முற்பகல்பத்து மணிக்கு கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ள கருத்தரங்கில கலந்துகொள்ளுமாறு கல்விப் பணிப்பாளர் வேண்டியுள்ளார்.

## கால்நடை வளர்ப்பிற்கு உதவி

(கொழும்பு)

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கையில் கால்நடை அபிவிருத்தி, பால்உற்பத்தி ஆகியவற்றுக்கு நிதியுதவி வழங்க முன்வந்துள்ளது சிறிலங்கா கால்நடை, பால் உற்பத்தியமைச்சுஇத்திட்டத்தின்மூலம் நிதியுதவிபெற இருக்கிறது கிராமப்புறங்களிலுள்ள கால்நடை வளர்ப்போர் இதனால் பெரிதும் பயன்பெற உள்ளனராம்.

**வீடுகள்**

ஹெலிகொப்டர் ஆகியன குண்டுவீச்சுத் தாக்குதலை மேற்கொண்டன.

குமுளமுனையில்மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதலால் இரண்டு கடைகளும், மூன்று வீடுகளும் முற்றாகச் சேதமடைந்தன செம்மலையில்மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் ஏழு வீடுகள் பலத்த சேதமடைந்தன.

**தோடும்**

இருந்த வயோதிபப் பெண்ணொருவர் அணிந்திருந்த தோட்டையும் மூக்குத்தியையும் இராணுவத்தினர் அபகரித்துக்கொண்டு சென்றுள்ளனர்.

**வேப்பங்குளத்**

ஆயுதங்கள் மீட்கப்பட்டன. இவற்றின் விபரம் வருமாறு:-

★ ஆர். பி. ஜி. - 01
★ எப் என் சி ரகத் துப்பாக்கி 01
★ அதறகுரிய மகஸீன்கள் 03
★ தொலைத் தொடர்பு சாதனம் 01
★ 5·56 ரவைகள் 240

**வவுனியா**

ரங்கள் தமது அறிக்கையில் நேற்று முன்தினம் அதிகாலையிலிருந்து மாலைவரை விமானப்படையும், தரைப்படையும் இந்த சண்டையில் மும்முரமாக ஈடுபட்டதாகவும் கூறியுள்ளன.

**விடைத்தாள்**

யவர்களில தகுதிவாய்ந்த அனைவரது பெயரும் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

விடைத்தாள் திருத்துனர்கள் கொழும்பு செல்வதற்கு தரைவழியூடாகவோ அல்லது கப்பல்மூலமாகவோ பாதுகாப்புடன் அனுப்பிவைக்க சகல ஏற்பாடும் செய்து வருவதாக அவர் மேலும் கூறினார்.

**ஷெல் தாக்குதல்**

அண்மையில வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரி பரீட்சை நிலையத்தின் அருகே பலாலி விமானநிலைய இராணுவ முகாமிலிருந்து மேற்கொண்ட ஷெல் தாக்குதல் குறித்து தாம் சர்வதேசசெஞ்சிலுவை அமைப்பு ஊடாகவும, ஐக்கியநாடுகள் அகதிகள் புனர்வாழ்வு நிலையத் தூதராலயம் ஊடாகவும் பரீட்சை ஆணையாளருக்குமுறையிட்டிருப்பதாகவும் கூறினார்.

(லோ)

**இருநாள்**

தொடர்ந்து மாலை4 30 மணியளவில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் ஓமந்தைப் பகுதியில் ஐந்து குண்டுகளை வீசியதில் பொதுமகனொருவர் படுகாயமடைந்துள்ளார். ஓமந்தை சமநலசேவை நிலையக் கட்டடமும், கடையொன்றும் பலத்த சேதமடைந்தன.

இதேவேளை நேற்றுக் காலை ஏழு மணியளவில் ஓமந்தையிலுள்ள மதுரங்குளம் என்னுமிடத்தில் இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் ஆறு குண்டுகளைவீசின இத்தாக்குதலில் இரண்டு வீடுகள் சேதமடைந்தன.

இதனைத் தொடர்ந்து இரண்டு குண்டுவீச்சு விமானங்கள் இரண்டு ஹெலிகள், ஒரு அவ்ரோ விமானம் என்பன இறம்பைக்குளம், பன்றிக்கெய்தகுளம, ஓமந்தை, நொச்சிமோட்டை, பரநாட்டானகல், பேயாடிகூழாங்குளம், புதுக்குளம், சாஸ்திரிகூழாங்குளம் ஆகிய பகுதிகளில் விமானத்தாக்குதலைத் தொடர்ந்து மேற்கொண்டவண்ணமுள்ளதாகஅங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**தமிழர்**

இனாமாக வழங்கப்படுகின்றன. இவை குடியேற்றங்களை நிறுவும சிங்களவருக்கு ஊக்குவிப்பாகவே தரப்படுகின்றன திருக்கோணமலை பிறெட்டெரிக் கோட்டையினுள்ளும், வெளியிலும் வாழ்ந்த சிங்களவரும், மற்றும் வென்னப்புவ நீர்கொழும்புச் சிங்களவருமே இக்கிராமங்களில் குடியமர்த்தப்படுகின்றனர்.

திரியாயில் மக்கள் மருந்துக்கும்இல்லை. இராணுவமுகாம் ஒன்று இங்கு உள்ளது இங்கு சிங்கள மீனவர்களைக் குடியமர்த்துவதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. பாலம்போட்டாறிலும் சிங்களவர்குடியேறி உள்ளர்கள் யான் ஓயாவிலும் சிங்களவர் காலப்போக்கில் குடியேறலாம். துறைமுகத்தை அண்டியுள்ள (ஹார்பர்) இடங்களிலும் சிங்களவர் குடியமர்த்தப்படுகின்றனர். குடியேற்றக்காரர்களுக்கு அரசாங்கத்தினால் பல வசதிகள் செய்து தரப்படுகின்றன. ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளும் வழங்கப்படுகின்றன.

முள்ளிப் பொத்தானையில் பரம்பரையாக வாழ்ந்த தமிழர் தம்பலகாமத்திற்கு ஓடி அங்குள்ள முகாம்களில் தங்கியுள்ளார்கள். இக்கிராமத்தினுள்ளும் சிங்களவர் நுழைந்துகொண்டார்கள். மூதூர்த் தொகுதியில் கிண்ணியா, ஆலங்கேணி, உப்பாறு, கங்கைத்துறை ஆகிய இடங்களில் வாழ்ந்த தமிழர் தமது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி கிளப்பன்பேர்க் (சீனன்வாடி) முகாமில் தஞ்சமடைந்துள்ளார்கள். தமிழர் வெளியேறியதும் வெற்றிடங்களை முஸ்லிம்கள் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு திருமலை மாவட்டத் தளபதி குணம் மேலும் தெரிவித்தார்,

திருமலையில் பொருளாதாரத்திற்கு அடிப்படை ஆதாரமாக விளங்கும் விவசாயமும், தொழில் முயற்சிகளும் சிறிலங்கா அரசின் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைகளால் முடங்கிப்போயுள்ளன. அதேபோன்று மீன்பிடித் தொழிலிலும்பலநடைமுறைச் சங்கடங்களைஅரசாங்கம் ஏற்படுத்தியுள்ளதுஎன்றார். சுருங்கக்கூறின் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் திருமலையில் வாழும் தமிழ் மக்களின் பொருளாதார வாழ்க்கையை கருவழிப்பதற்கான திட்ட வகுப்பு என்பது தெளிவாகப் புலப்படும் என்றார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்தில் உள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மே மாதம் 04 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.